பதிவு எண்: M. 6311. ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 7 (20–4–68) சனி ★ வெளியூர்: சித்திரை 9 (21–4–68) ஞாயிறு [இதழ்: 257

நிராகரிப்பு!

வியட்நாம் பிரச்சினைபற்றி முன்னேட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அமெரிக்க அரசு 15 நாடுகளின் பெயர்களைத் தந்து, 'அந்த நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் சந்திக்கலாம்' எனக் கூறியிருந்தது; 'இதற்கு ஹனாய் (வட வியட்நாம்) என்ன பதிலளிக்கப்போகிறதோ' என, உலகம் முழுவதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், ஹனாய், அத்தனை இடங்களையும் நிராகரித்துவிட்டது!

வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கும் மத்திய அரசின் கொள்கை

கணக்கீட்டு இயந்திரத் திணிப்புக்குக் கடும் எதிர்ப்பு

டில்லி மாநாட்டில் அமைச்சர் மாதவன் வாதம்

புதுடில்லி, ஏப். 19—

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலும், மற்றும் பிற அலுவலகங்களிலும், கணக்கீட்டு இயந்திரங்களைத் திணிப்பதற்குத் தமிழக அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இங்கு நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. செ. மாதவன், கணக்கீட்டு இயந்திரம் புகுத்தப்படும் கொள்கையையே சாடினார்.

மற்றும், கேரள மத்தியப்பிரதேச அமைச்சர்களும் கணக்கீட்டு இயந்திரத் திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

"படித்தவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், இப்படி, ஆட்களுக்குப் பதில் இயந்திரங்களைப் புகுத்த முயலுவது கூடாது"

என்று, திரு. செ மாதவன் வாதாடினார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலும், இரயில்வேயிலும் எழுத்தர் வேலையைச் செய்வதற்காக இந்த இயந்திரங்களைப் புகுத்திப் பலருக்கு வேலையில்லாமல் செய்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

"பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்திக்கான வழிமுறைகளை மேம்படுத்தவும், இயந்திரங்களைப் புகுத்துவதில் தமிழக அரசுக்கு ஆட்சேபனை இல்லை"

என்றும் அமைச்சர் மாதவன் கூறினார்.

மகாராட்டிரம், குசராத், அசாம் ஆகிய மாநிலங்களின் அமைச்சர்கள், மத்திய அரசின் கொள்கைக்கு (இயந்திரத் திணிப்புக்கு) ஆதரவு தெரிவித்தனர்.

668 பேர் போட்டி!

சண்டிகார், ஏப். 20—

அரியானா சட்டமன்றத் தேர்தலில், 82 இடங்களுக்கு 688 வேட்பாளர்கள், வேட்பு மனு தாக்கல் செய்திருக்கின்றனர்.

எட்டு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

சென்ற பொதுத் தேர்தலில், 776 போட்டியிட்டனர்.

மிகுந்த சுமையை ஏற்கவேண்டிய நிலை?

புதுடில்லி, ஏப். 19—

"பாகிஸ்தான், சீனா ஆகியவை இந்தியாவின்மீது காட்டிவரும் போக்குகளில் மாறுதல் ஏதும் காணப்படவில்லை.

"சீனாவும், பாகிஸ்தானும் நம்மிடம் கொண்டுள்ள பகைப் போக்கு நீடித்துவருவதைக் கருதி, பாதுகாப்புத் துறையில், நாம், மிகுந்த சுமையை ஏற்கவேண்டியிருக்கிறது"

என்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங், இராணுவத் தளபதிகள் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மிசௌரி மாகாணச் சிறையிலிருந்து தப்பியோடிய ஜேம்ஸ் ஏர்ல் ரே என்டவனே, 'நீக்ரோ மக்களின் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கைச் சுட்டதாகக் கூறப்படும் எரிக் ஸ்டார்வோ கால்ட்' என்பதை, இப்போது கண்டறிந்திருக்கின்றனர்.

நியூயார்க் நகரில் அண்ணா

இரண்டு நாட்கள் தங்கி முக்கிய இடங்களைப் பார்ப்பார்!

திங்களன்று யேல் பல்கலைக் கழகம் புறப்பாடு

நியூயார்க், ஏப். 19—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று பாரிசிலிருந்து நியூயார்க் நகரம் வந்தடைந்தார்.

அமெரிக்காவில் மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருக்கும் அண்ணா அவர்கள் நாளையும் மறுநாளும் நியூயார்க் நகரின் முக்கிய இடங்களைப் பார்த்துவிட்டு, திங்கட்கிழமையன்று, யேல் பல்கலைக் கழகத்தை அடைவார்.

நியூயார்க் விமான நிலையத்தில், இந்தியத் தூதுவரக அதிகாரிகளும், அமெரிக்க அரசு அதிகாரிகளும், மற்றும் அமெரிக்கா வாழ் தமிழ் மக்களும் அண்ணா அவர்களை மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர்.

அண்ணா அவர்கள், பிரான்சின் தலைநகரான பாரிசில் சுமார் 42 மணி நேரம் பயன்தரும் வகையில் கழித்தார்.

பாரிஸ் நகர் அருகில் உள்ள பிளின்னர் என்னும் இடத்திலிருக்கும் உலகப் பெற்ற மோட்டார் தொழிற்சாலையை அண்ணா அவர்கள் கண்டு அதன் அரும் பெருஞ் சாதனைகளை வியந்தார்.

லோவோர் அரண்மனைக்குச் சென்று அங்குள்ள உலகப் புகழ்வாய்ந்த கலைப் பொருட்காட்சியைக் கண்டுகளித்தார்.

அண்ணா வருகையையொட்டி, இந்தப் பொருட்காட்சியை வழக்கத்திற்கு மாறாக அரை மணி நேரம் முன்னதாகவே திறந்து வைக்குமாறு பிரெஞ்சு அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

புகழ்பெற்ற வெர்சேல்ஸ் அரண்மனையையும் அதன் பூங்காக்களையும் அண்ணா அவர்கள் பார்வையிட்டார்.

ஐ. நா பேரவையின் கல்வி—விஞ்ஞானப் பண்பாட்டு அமைப்பின் பொது இயக்குநரான திரு ரனே மகுவைச் சந்தித்துப் பேசி அவருடன் பகலுணவு கொண்டார். மேற்படி அமைப்பின் துணை இயக்குநராகவுள்ள தமிழரான டாக்டர் மால்கம் ஆதிசேஷயாவுடனும் அண்ணா அவர்கள் பேச்சு நடத்தினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை: 2/68

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள், ஏற்கனவே தலைமைக் கழக அறிக்கை 1/68-ல் குறிப்பிட்டிருந்த நாட்களில் 19–4–68 அன்று கூடிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் செய்யப்பட்ட சில மாறுதல்களுக்கேற்ப, கீழ்க்கண்டவாறு இறுதியாக உறுதி செய்யப்படுகின்றன:—

நாட்கள் 1968	அமைப்புகள்
மே 4, 5:	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், நகர—பெருநகர வார்டு கிளைகள்
மே 18, 19:	சென்னை வட்டக் கிளைகள், நகர—பெருநகரக் கிளைகள், மாநில அமைப்புகளின் கிளைக் கழகங்கள்
சூன் 2:	வட்டக் கழகங்கள், சென்னைப் பகுதிக் கிளைகள்
சூன் 23:	மாவட்டக் கழகங்கள், மாநில அமைப்புகள்
சூலை 21:	தலைமைக் கழகம்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சட்டமும்—ஒழுங்கும் கெட்டுவிட்டதா?

சவானிடம் அமைச்சர் மாதவன் விளக்கம்

புதுடில்லி, ஏப். 19—

தமிழகச் சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன், இன்று உள்துறை அமைச்சர் திரு. சவானைச் சந்தித்து, அண்மையில் சென்னையில் மாணவர்களுக்கும்—பஸ் தொழிலாளருக்குமிடையே நிகழ்ந்த மோதல்கள் பற்றி விவரம் தெரிவித்தார்.

இனி இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழாவண்ணம் இருக்கத் தமிழக அரசு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் மாதவன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிகள் தொடர்பாக நீதி விசாரணை நடத்தத் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருப்பதையும் சவானுக்கு அவர் நினைவுபடுத்தினர்.

'தமிழகத்தில் சட்டம்—ஒழுங்கு குலைந்துவிட்டதாகக் கூறப்படுவது உண்மையல்ல' என்பதையும் உள்துறையமைச்சருக்குத் திரு. மாதவன் உணர்த்தினர்.

இந்த வாரத் துவக்கத்தில், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர் ஆர். டி. பார்த்தசாரதி, தலைமையமைச்சரையும் உள்துறையமைச்சரையும் சந்தித்து, சென்னையில் அண்மையில் நடந்த சம்பவம் குறித்து முறையிட்டதாகத் தெரிகிறது.

உணவுத்தட்டுப்பாடு தேசீய நோயாகிவிட்டது!

இரந்தும் உயிர் வாழும் நிலை இன்னமும் நீடிப்பதா?

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் தெய்வீகன் கண்டனம்

புதுடில்லி, ஏப். 18—

“ஆண்டுதோறும் உணவுத் தட்டுப்பாடு பற்றிக் கேள்விப் பட்டுக்கொண்டிருக்கின்றோம்—அது ஒரு தீராத நோயாக—தேசிய நோயாக ஆகிவிட்டது!

“பசியும், நோயும், குறைந்த ஊட்டச்சத்தும், பட்டினியும் நிலவுகின்றன! இருபதாண்டுக்கால ஆட்சிக்குப் பிறகும் பசியும், பிணியும், பகையுமே உள்ளன! ‘உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும் சேராதியல்வதே நாடு’ என்று திருக்குறள் கூறுகிறது; இந்த மூன்றையும் இல்லாது ஒழிக்கும் நாடே ‘உண்மையான நாடு’ எனப் பொருள!

“இந்த ஆண்டில் 80 இலட்சம் டன் உணவுப் பொருளை, அரசு இறக்குமதி செய்யப்போவதாகத் தெரிகிறது; ஆனால், பற்றுக்குறையை ஒழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

“உணவுப் பொருள், நிரந்தரப் பற்றுக்குறைப் பொருளாகிவிட்டது! ஆண்டுதோறும் உரைகள் பலவற்றையும், வாக்குறுதிகளையும், ஆறுதல் மொழிகளையும் கேட்டுக்கொண்டு வருகிறோம்! சொற்கள், பசியை நீக்குமென்றால், அந்தப் போரில் நாம் வென்றே தீருவோம்!”

இவ்வாறு, நாடாளுமன்ற மக்களவையில், கழக உறுப்பினர் மு. தெய்வீகன் சுட்டிக்காட்டி எச்சரித்தார். ஏப். 10-ம் நாளன்று அவர் ஆற்றிய உரையில் மேலும் கருத்தறிவித்ததாவது:—

அமைச்சர்களை ‘விழுங்கும்’ ஈடு இணையற்ற அமைச்சகம்!

“வள்ளுவர், தமது இலக்கியத்தில், ‘செவிக்குணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்’ எனக் கூறியுள்ளார்; ஆனால், அரசின் மொழிக் கொள்கையின் காரணமாக இன்று காதில் விழுவது, செவிக்குணவு உல்ல! வேறு ஏதோ!

நாட்டு மக்கள் போன்று, உணவு—விவசாய அமைச்சுகள், பசி நிறைந்த அமைச்சுகள்! தன் பொறுப்பிலிருக்கும் அமைச்சர்களை, ‘ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்றுண்டுக்கு ஒரு முறை விழுங்கிவிடுவது’ என்ற ஈடு இணையற்ற பெருமையைப் பெற்றதாகும்—உணவு அமைச்சு!

நாட்டின் நல்வினைப் பயனாகவும் அந்த அமைச்சுகளின் தீவினைப் பயனாகவும் அவற்றால் விழுங்கப் பட முடியாத ஜெகஜீவன்ராமும், ஷிண்டேயும் அமைச்சர்களாக உள்ளனர்; ‘இது ஒரு சாதனை’ என்று அமைச்சர்கள் அமைந்து விடக் கூடாது!

‘சர்வரோக நிவாரணி’யா?

பி. எல்.-480 அமெரிக்க உணவுப் பொருட்களில் நம்மை இணைத்துக்கொண்டுள்ளோம்.

‘பொதுச் சட்டம் 480’ என்பது, ‘நிரந்தரக் கடன் சட்டம்’ என்ற பொருளையும் பெறக்கூடும்.

காங்கிரசைப் பொறுத்தவரையில்—இந்த பி. எல். 480-ஐ, ‘நாட்டில் தொடர்ந்து நிலவும் உணவுப் பற்றுக்குறைக்கு சர்வரோக நிவாரணி’ என்று கருதுவதாகவே தோன்றுகிறது.

உண்மைக்குப் புறம்பான உருவமே அவர்!

நாட்டின் உணவுப் பற்றுக்குறை பற்றி வலுநிறைந்த விளக்கம் ஒன்றை அண்மையில் கேள்விப் பட்டேன்; ‘இந்நாட்களில், மக்கள் அதிகம் உண்ணுகின்றனர்’ என்று மத்திய அமைச்சர் ஒருவர் கூறிய விளக்கமே அது!

இந்த விளக்கம், உண்மைக்கு அருகிலேனும் வருகின்றதா? விந்தைக்குரிய இந்தக் கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தவர் பொன்னுள்ளம் படைத்த அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆவார்கள்!

உண்மையில் ஒரு நாளில் அவர் ஒரு தடவையே உணவு கொள்கிறார்; அவரைப்போல நாட்டு மக்களும் ஒரு தடவை மட்டுமே உணவு கொள்ளச் செய்யுமாறு எதிர்பார்க்கலாமா?

ஒவ்வொரு சிக்கலுக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன; ஒருபுறம் உண்மை—மற்றொருபுறம் மொரார்ஜி தேசாய்!

ஏன் இந்த நிலைமை?

பி. எல். 480 திட்டப்படி நமக்கு அளிக்கப்படும் உணவுப் பொருட்களுக்கு அமெரிக்க நிர்வாகத்திடம் ரூபாய் நாணயமாக நாம் செலுத்துகிறோம்.

சில கொடுக்கல்—வாங்கல் தொடர்பில் நமக்கு டாலராகச் செலுத்த வேண்டிய நேரத்திலும் அமெரிக்க அரசு, ரூபாய் நாணயத்தையே தருகிறது!

டாலருக்குப் பதிலாக நம் பணமே நம்மிடம் திருப்பித் தரப்படுகிறது; அதன் காரணமாக, மதிப்பு நிறைந்த வெளிநாட்டு நாணயத்தை நாம் இழக்கிறோம்! இதனை, நிதியமைச்சகம் ஆராயும் என எண்ணுகிறேன்.

உணவு அமைச்சகம், அமெரிக்காவிடமிருந்து 35 இலட்சம் டன் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கான திட்டமும், பி. எல். 480 மூலம் உதவி பெறுவதும் தான் இந்தச் சிக்கல் அனைத்துக்கும் காரணம்!

இரத்தல் ஏனோ?

நமது விவசாயம்—பொருளாதாரம் சீரடையும்வரை—உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கும்வரை—பி. எல். 480 நிரந்தரம் பெறவே செய்யும்! அமெரிக்காவின் பாட்டுக்கு ஏற்ப நாம் ஆடவே வேண்டும்!

வள்ளுவர் கூறியுள்ளார்—‘ஒரு நாடு உயிர் வாழ, குறைந்த வழிவகையே உள்ளதெனினும், அந்நாடு கப்பரை ஏந்தி இரந்து கொண்டு வரக்கூடாது! இந்த முடிவு உலகையும்விடப் பெருமை வாய்ந்தது’ என்று!

நிறைவேற்றப்படாத திட்டம்

குறிப்பிடத்தக்க அளவில் அவசரக்கால இருப்பு ஒன்று வைப்பதுபற்றிய திட்டம் நீண்டகாலமாக நிறைவேற்றப்பெறாமல் இருப்பதை நிதியமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்; இதுபற்றித் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

நிறைவுடன் வாழ்கின்றனரா வேளாண்மை மக்கள்?

கோதுமை அறுவடை செய்யும் களிப்புநிறைந்த குடியானவன் ஒருவனின் படத்தைச் செய்தித்தாளில் பார்த்தேன். அந்தக் குடியானவன் வேறு யாருமல்ல—தலைமை அமைச்சர்தான். தலைமையமைச்சரின் முகத்தில் மகிழ்ச்சியும் நிறைவும் பொங்குவது கண்டு நாம் உவகை கொள்கிறோம்.

ஆனால், குடியானவன் அறுவடைக் காலத்தில் மகிழவா செய்கிறான்; அந்த நேரத்தில், நூற்றுக்கணக்கான சிக்கல்கள் அவனை அழுத்திக்கொண்டிருக்கின்றன! குடியானவர்கள் மகிழ்ச்சியாகவும், நிறைவோடும் வாழ்தல் வேண்டும்.

சாமானியக் குடியானவனின் பல்வேறு சிக்கல்களும் அணுகி ஆய்ந்து நீக்கப்பட்டு விடுமானால், நாட்டின் உற்பத்தி அபரிமிதமாகும் என்பது உறுதி.

குழு ஒன்று அமைத்துக் குறை களைய முன்வருவீர்!

நீண்ட காலம் ஆய்வு செய்யப் படாமலிருக்கும் குடியானவர்களின் நிலைபற்றி ஆய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நிபுணர் குழு ஒன்று அமைக்கவேண்டிய காலம் வந்துள்ளது

அரசு ஊழியர்களின் நிலை அளவுக்கேனும் குடியானவர்களின் நிலை உயர்த்தப்படுதல் வேண்டும்; அவர்களுக்கு முதுமைக் கால ஊதியம் அளிப்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்; குடியானவர்களின் குழந்தைகளுக்கு விவசாயப் பொறித் துறைப் படிப்பில் சிறப்பிடம் தரவேண்டும்.

தேசிய வருமானத்தில் விவசாயத்தின் ஆக்கபூர்வ பங்கும் குறுகிய கால அளவில் அறியக்கூடிய அதன் ஆக்கப்பூர்வப் போக்கும் இன்றையக் கட்டத்திலும் உணரப்படவில்லை.

கோடை வறட்சியின் விளைவை கண்டிருக்க முடியுமா?

நமது சமூக—பொருளாதார அமைப்புக்களை பகுத்துக்காட்டுவதைவிட, சிறப்பாற்றல் நிறைந்த விவசாயத்தில் சிறிதளவு கவனம் செலுத்தியிருந்தாலும் அடுத்தடுத்து நிகழ்ந்த கொடிய கோடை வறட்சிகளின் விளைவுகளைக் கண்டிருக்க முடியாது என்று காரணம் கூறலாம்

இந்தக் கருத்து விவசாய ஆய்வு மன்றத்தின் பொது இயக்குநரால் தெரிவிக்கப்பட்டதாகும். அவரது துணிச்சலையும், இது பற்றி அவர் பேசியுள்ள தெளிவினையும் பாராட்டுகிறேன்.

குடியானவர்களின் சிறந்த நலன்களைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு உதவும் வகையில் டிராக்டர்களும், மற்ற விவசாயக் கருவிகளும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டு பயன்படுத்தப் படுமாறு செய்யவேண்டும்.

கடமையைச் செய்யத் தவறினல் வெளியேறிவிடலாம்

இந்த ஆண்டு 80 இலட்சம் டன் உணவுப் பொருள் அரசு இறக்குமதி செய்யப் போவதாகத் தெரிகிறது. ஆனல் பற்றுக் குறையை நிவர்த்திக்க அரசு என்ன செய்துள்ளது?

மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வது அரசின் ஆரம்பக் கடமையாகும்; அப்படிச் செய்யத் தவறும் அரசு வெளியேறிவிடலாம்!

உற்பத்தியில் ஏன் வீழ்ச்சி?

உர உற்பத்தியில் பெரியதொரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. குறி இலக்கை நாம் அடையவில்லை; குறி இலக்கில் ஒரு பகுதியைத்தான் நாம் எட்டியிருக்கிறோம். இது மிகவும் வருந்தவேண்டிய ஒன்றாகும். 10 அல்லது 20 சதவீதம் குறி இலக்கில் குறைவு ஏற்பட்டால், அதைப் புரிந்து கொள்ளலாம்; ஆனல் ஒவ்வொரு ஆண்டும் 60 சதவீதம் குறைவு ஏற்படுகிறது.

தன்னிறைவை அடைந்தோமா?

இந்த அமைச்சு தன் மிதமான போக்கை விடுத்து நிதி நிலையறிக்கை செலவினத்தில் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள திட்டங்களை வேகமாக நிறைவேற்றுமாறு கோருகிறேன்.

அநேக விவசாயத் திட்டங்களுக்குப் பிறகு—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு—தன்னிறைவை நாம் அடையவோ, அதன் அருகே செல்லவோ இல்லை!

ஏந்துகின்ற கப்பறை நாட்டை விடப் பெரிதாக உள்ளது!

இன்னும் நாம் கப்பறை ஏந்தி உலகைச் சுற்றுகிறோம் ஏந்துகின்ற கப்பறை நாட்டைவிட பெரிதாயுள்ளது!

இரந்துதான் நாம் வாழவேண்டுமானல்—அது மட்டுமே வழியானல்—நாம் அழிவோமாக!

சுருக்கமாகவும் தெளிவாகவும் செய்தியைச் சொல்லும் வல்லவரான வள்ளுவர், “இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்—பரந்து கெடுக உலகியற்றியான்’ என்கிறார்.

வள்ளுவரின் இனமானது, மனித இனத்தின்மீது கொண்ட அன்பாலும், நேச உணர்வாலும் ஏற்பட்டது.

எல்லோருக்கும் குறைந்த அளவாவது உணவு கிடைக்கச் செய்வோம்; ஏனெனில், உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்!

காங்கிரசு அரசு உணவையாவது கொடுக்கட்டும்! அதன் மூலம், குறைந்தபட்சம் தன் வாழ்வும் புகழும் நசியாமல் காப்பாற்றப்படவாகிலும் முயலட்டும்!

சமுதாய நலத் திட்டம் கைகழுவப்படும்?

திட்டக் குழுவின் தவறால் கொட்டிச் செலவிட்ட பணமெல்லாம் வீண்!

புதுடில்லி, ஏப். 18—

“சமுதாய நலத் திட்டத்தின் எதிர்காலம், அடுத்த மாதம் சென்னையில் நடைபெறவிருக்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில் முடிவாகும்; இந்தத் திட்டம், துவக்கத்தில் எதிர்பார்த்தபடி வெற்றி பெறவில்லை; எனவே, இந்தத் திட்டத்தை நீடிக்க வேண்டுமா அல்லது மாற்றியமைத்து இன்னும் திறம்பட நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமா என்பதையெல்லாம், மாநில அரசுகள்தான் கவனிக்க வேண்டும்”

என்று மக்களவையில், உணவுத்துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

சமுதாய நலத்திட்டம் இயங்கும் நிலைபற்றிப் பல உறுப்பினர்கள், கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டனர்.

“ஏமாற்று வித்தை—படு தோல்வி—வெட்கக்கேடு” என்றெல்லாம் ஏசினர்! எதிர்க் கட்சியினர் மட்டுமன்றி, காங்கிரசு உறுப்பினர்களும் ‘தாக்கு’தலில் ஈடுபட்டனர்!

“எந்தப் பிரச்சினையிலும், ‘ஏமாற்று வித்தை’யைத் தவிர வேறு எதனையும் உங்களால் காண முடியாதா?” என்று அமைச்சர் ஜெகஜீவன்ராம் திருப்பிக்கேட்டார்; ‘சமுதாய நலத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளைச் சார்ந்ததாகும்; எனவே, அதன் எதிர்கால அமைப்புப் பற்றி மாநில அரசுகளைக் கலந்தாலோசித்த பின்னர்தான் முடிவுசெய்ய இயலும்’ என்றார்.

“திட்டக் குழு, தவறான முறையில் திட்டமிட்டதுதான், இந்தத் திட்டத்தின் தோல்விக்குக் காரணமாகும்”

என்று சுட்டிக்காட்டிய செங்கல்வராய நாயுடு என்பவர், ‘திட்டக் குழு தன்னை உயர்த்திக் கொண்டிருக்கிறதேயன்றி, சமுதாய நலத் திட்டத்தை வளர்ச்சியடையச் செய்யவில்லை’ என்றார்.

இந்தப் பிரச்சினையை எழுப்பிய லோபோ பிரபு, ‘இந்தத்திட்டம், வேலைவாய்ப்பு ஏற்படுத்த அறவே தவறிவிட்டது’ எனக் குறிப்பிட்டார்.

“இந்தத் திட்டம் தோற்றுவிட்டதாக எந்த மாநில அரசும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கவில்லை” என்று உணவுத்துறை துணை அமைச்சர் எம். எஸ். குருபாதசாமி கூறினார்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உதவி

மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிக்கை

சென்னை, ஏப். 19—

“தமிழகத்தில் தனி நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ. 4.25 கோடியும், கிராம மின்சார விரிவுத் திட்டங்களுக்கு ரூ. 4-கோடியும் நிதி உதவி தருமாறு தமிழக அரசு, மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது”

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்: அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“இந்த நிதி உதவிக் கோரிக்கை மிக முக்கியமானதாகும். மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ரூ. 20 கோடி செலவுத் திட்டத்தில் இவைகளும் அடங்கியிருக்கின்றன.”

சிறிய டாக்சிகளில் 4 பேர் செல்லலாம்

தமிழக அரசு ஆணை

வாடகை மோட்டார் வண்டிகளில் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்து மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது; இந்த ஆணை, சென்னை நகரில் மட்டுமன்றி வெளியூர்களிலும் ஏப். 12-ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துவிட்டது.

புதிய ஆணையின்படி, சென்னையில் ஸ்டாண்டர்டு வண்டிகளில் டிரைவர் தவிர மூன்று பேரும், பியட், அம்பாசிடர் வண்டிகளில் டிரைவர் தவிர நான்கு பேரும், ஏனைய பெரிய வண்டிகளில் டிரைவர் தவிர ஐந்து பேரும் செல்லலாம்.

வெளியூர்களில் ஸ்டாண்டர்டு, பியட் வண்டிகளில் டிரைவர் தவிர நான்கு பேர் செல்லலாம்; அம்பாசிடர் மற்றும் பெரிய வண்டியில் டிரைவர் தவிர 5 பேரும் செல்லலாம்.

திரைப்பட 'அரிச்சந்திரர்'களின் சொந்த வாழ்வில்!

புதுடில்லி, ஏப். 18—

"திரைப் படத்தில், உண்மை தவருத அரிச்சந்திர மன்னனுக நடித்தவர்கள், சொந்த வாழ்க்கையில் வருமான வரி ஏய்ப்பவர்களாகவும் கறுப்புப் பணம் குவிப்பவர்களாகவும் இருக்கையில், 'அரிச்சந்திரா' போன்ற படங்களால் மக்களுக்கு என்ன பயன் ஏற்படும்?"

என்று மக்களவையில், காங்கிரசு உறுப்பினரான திரு. வெங்கட சுப்பையா வினவினர்.

செயதி-ஒலிபரப்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு அவர் பேசுகையில்,

"திரைப் படங்களில் அரிச்சந்திரனுகவும், மகான்களாகவும் நடிப்பவர்கள், உண்மை வாழ்க்கையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்"

எனக் குறிப்பிட்டார்.

கோபி வட்டத்தில் யு. ஆர். ஜீவரத்தினம் இசை நிகழ்ச்சிகள்

ஜி என். இராசு குடும்ப நிதிக்கு ரூ. 11,301 கிடைத்தது

கோவை மாவட்ட தி. மு. கழக அவைத் தலைவர் ஜி என். இராசு அவர்களின் குடும்ப உதவிக்காக இசைக் குயில் யூ. ஆர். ஜீவரத்தினம் அவர்களின் இசை நிகழ்ச்சி மூலம் நிதி திரட்டப்பட்டது.

கோபி – சத்தியமங்கலம் – அந்தியூர் ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள் மூலம் செலவு போக நிகரமாக ரூ. 11,301 மீதம் ஆயிற்று.

கோபி வட்ட தி மு க. செயலாளர் பி ஏ. சாமிநாதன் எம்.பி. அவர்களிடம் இந்தப் பணம் சேர்ப்பிக்கப் பட்டது.

இத்தொகையைக் கொண்டு வீடோ, நிலமோ வாங்கி, மே மாத இறுதிக்குள் கோபி ஜி என். இராசு அவர்களுக்கு அளிக்கப்படும்

இசை நிகழ்ச்சிகள் நடத்திக் கொடுத்த திருமதி யு. ஆர். ஜீவரத்தினம் அவர்களுக்கும்—குழுவினருக்கும், நிதி திரட்டுவதில் ஈடுபட்ட கழகச் செயலாளர்களுக்கும் கழகத் தோழர்களுக்கும், நிதி தந்துதவிய அனைவருக்கும் கோபி வட்ட தி மு.க செயலாளர் பி. ஏ. சாமிநாதன் எம்.பி. நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

அலுவலக ஊழியர்களுக்காகத் தனிப் பேருந்துகள்

ஆட்டோ—ரிக்ஷாக்களை அதிகரிக்க யோசனை

சென்னை, ஏப். 20—

"அலுவலகங்கட்குச் சென்று பணியாற்றி வருவோருக்கு வசதியாகச் சென்னை நகரில் காலையிலும், மாலையிலும் தனிப் பேருந்துகளை விடுவது பற்றி யோசிக்கப்படுகிறது"

என்று பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆட்டோ—ரிக்ஷாக்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்துப் போக்குவரத்துப் போலீசுத் துறையினருடன் கலந்தாலோசிப்பதாகவும் அமைச்சர் கூறினர்.

'ஆட்டோ—ரிக்ஷாக்களை அதிகரிப்பது கூடாது' என்று போக்குவரத்துப் போலீசுத் துறையினர் தான் கூறிவருவதாகவும், ஆட்டோ—ரிக்ஷாவினுல் விபத்துக்கள் அதிகரிப்பதுடன் மின்சார வழி காட்டி விளக்குகள் பாதிக்கப்படக் கூடுமென்றும் போலீசார் கூறுவதாகவும் அமைச்சர் கூறினர்; மேலும் பயணிகளின் உடல்நலம் கெடுவதாகவும் குறிப்பிட்டார்.

ரிக்ஷாக்களை ஒழிக்க மத்தியஅரசு திட்டம்

மாநில அரசுகளுக்குத் தந்துள்ள யோசனை

புதுடில்லி, ஏப். 20—

சைக்கிள் ரிக்ஷாக்கள், ஆள் இழுக்கும் ரிக்ஷாக்கள் ஆகியவற்றை அறவே எடுத்துவிடுவதற்கான ஒரு யோசனையை மத்திய அரசின் தொழிலாளர் நல இலாகா, மாநில அரசுகளுக்குத் தெரிவித்திருக்கிறது. இந்த யோசனையை மத்திய அரசுகள் அமுல் நடத்தினுல் இன்னும் ஐந்தாண்டுக் காலத்தில் நாடெங்கும் சைக்கிள் ரிக்ஷாக்களும், ஆள் இழுக்கும் ரிக்ஷாக்களும் அறவே ஒழிக்கப் பட்டு விடும்.

மத்திய தொழிலாளர் நல இலாகா, அண்மையில் மாநிலங்களுக்கு அனுப்பியுள்ள ஒரு கடிசத்தில், ரிக்ஷாக்களைப் படிப்படியாக நீக்கிவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஆட்டோ-ரிச்ஷாக்களை விடுவதற்கான ஒரு திட்டத்தைக் கூறியிருக்கிறது.

இந்த மாறுதலால், ரிக்ஷா ஓட்டுவோருக்கு, ஆட்டோ-ரிக்ஷாக்கள் வாங்கி ஓட்ட மாநில அரசு பண உதவி செய்வதற்காக மத்திய அரசு நிதி உதவி அளிக்கும். மாநில அரசுக்குஏற்படக் கூடிய செலவில் 60-சதவிகிதம் வரை மத்திய அரசு கொடுக்கக் கூடும்.

"சைக்கிள் ரிச்ஷா, கை ரிக்ஷாக்களுக்கு லைசென்சு தருவதைப் படிப்படியாகக் குறைக்கலாம்" என்பது மத்தியத் தொழிலாளர் நல இலாகாவின் யோசனையாகும்.

கோவை மாவட்ட தி. ப. தொ. மு. சங்கம்

தலைமைக் குழு நிர்வாகிகள் தேர்வு

கோவை மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைமை சங்க நிர்வாகிகள் தேர்தல், 13-4-68ல் நடைபெற்றது; தேர்தல் ஆணையாளராக திரு. முத்துநேசன் இருந்து நடத்திக் கொடுத்தார்; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : காட்டூர் கோபால்.

துணைத் தலைவர்கள்: சோவிந்தசாமி (உடுமலை), கே. ஆர். சுப்பையன் (வழக்கறிஞர்), சுப்பண்ணன் (கோவை), சு. கிருட்டினன் (ஈரோடு), டி. இலட்சுமணன் (பொள்ளாச்சி).

பொதுச் செயலாளர்: சு. துரைசாமி எம்.எல்.ஏ.

செயலாளர்கள் : ஏ.எஸ். மணி, இரா. முருகேசன், பி. கருப்புசாமி, வெ. ர குருசாமி, ஏ. வெங்கடாசலம்.

பொருளாளர் : கோ. பா. பழனிசாமி.

மற்றும் 21-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

எஸ்.ஆர். இராதாவுக்கு மோட்டார் சைக்கிள்

குடந்தை தொழிற்சங்கத் தோழர்கள் அன்பளிப்பு

குடந்தை நகர தி.மு.க. அவைத் தலைவரும், தொழிற்சங்கச் செயல் வீரருமான தோழர் எஸ். ஆர். இராதா எம்.சி. அவர்களின் தொழிற்சங்கப் பணியைப் பாராட்டியும், அவர் பொதுப் பணியில் விரைந்து செயல்படவும், மோட்டார் சைக்கிள் ஒன்று அளித்து ஊக்குவிப்பது என்றும், விழாவை மே திங்களில் பொதுப் பணித்துறையமைச்சர் அவர்களை அழைத்து மிகச் சிறப்பாக நடத்துவது என்றும், குடந்தை நகரத் தொழிற்சங்கப் பணியாளர்களும், கழகத் தோழர்களும் கூடி முடிவு செய்துள்ளனர்.

குடந்தை நகரத் தொழிற்சங்கப் பணியாளர்களும், கழக ஊழியர்களுமாக 28-பேர் அடங்கிய விழாக் குழு ஒன்றும் அமைக்கப் பட்டது.

விழா சிறப்புற கழகத் தோழர்களும், வணிகப் பெருங்குடி மக்களும், தொழிற்சங்க ஊழியர்களும், தங்களால் இயன்ற நிதி தந்து பேருதவி அளிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:—
எஸ். எஸ். ஜி. சுப்பராயன், பொருளாளர், சி. சு. கோவிந்தசாமி சன் மளிகை, பெரிய கடை வீதி, கும்பகோணம்.

மறுப்பு

"கடந்த 10 ஆண்டுகளாக தி. மு. க. உறுப்பினராகவும், கோவை அடுத்துள்ள குப்பக்கோனும்புதூர் கிளை பிரதிநிதியாகவும், எம். ஜி ஆர். மன்றச் செயலாளராகவும் இருந்துவரும் நான் கழகத்தைவிட்டு விலகிவிட்டதாக காங்கிரசு நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி ஆதாரமற்ற—அவதூருனது" என்று, குப்பகோனும் பட்டித் தோழர் கு. திரவியம் தெரிவிக்கிருர்.

மதச் சார்பற்ற தன்மை?

"பம்பாய் மாநகராட்சித் தேர்தல்களில், காங்கிரசு ஆதரவு பெற்ற முஸ்லிம்கள் பலர் வெற்றியடைந்துள்ளபொழுது முஸ்லீம் லீக் சார்பாக நின்றவர்களில் இரண்டே பேர்தான் வெற்றி பெற்றுள்ளனர்" என்று காங்கிரசுத் தலைவர் நிலலிங்கப்பா, பெருமையுடன் பேசியிருக்கிருர்!

இது தொடர்பாக, பம்பாய் மக்களின் மதச் சார்பற்ற தன்மையையும் அவர் பாராட்டியிருக்கிருர்.

அண்மையில் காங்கிரசுத் தலைவர் பம்பாய் சென்றிருந்த பொழுது, முஸ்லிம் மதத் தலைவர் ஒருவரோடு அவர் 45 நிமிடங்கள் அளவளாவிக்கொண்டிருந்ததும், மதத் தலைவர் அவருக்கு சால்வை ஒன்றைப் பரிசளிப்பாகத் தந்ததும் குறிப்பிடத் தக்கது.

திருவில்லிபுத்தூர் வட்ட

கிளைக் கழகங்கட்கு:

திருவில்லிபுத்தூர் வட்டத்தில் 1965-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை தலைமைக் கழகத்தில் முறைப்படி உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்ற தி. மு. கழகக் கிளைகள், 28—4—68-க்குள் தங்கள் கிளையின் முகவரியைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி, வட்டக் கழகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் சி. மலைக்கனி கேட்டுக் கொள்கிருர்.

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்கதரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?—அவை மக்களைத் துறுதுறு என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணுவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி: 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா ஸ்டீல் ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினுல் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு விடுதிகளும் இனமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன; ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸக்டமி' ஆபரேஷன் செய்யப் படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப் படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொறுத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்

காங்கிரசு தொட்டதெல்லாம் தோல்வி

திட்டக்குழுவின் பரிதாபகரமான நிலை

நாடாளுமன்றத்தில் செ. கந்தப்பன் இடித்துரை

புதுடில்லி, ஏப். 19—

"பாராட்டத்தக்க ஒரு முயற்சியில் இறங்கிய பின்பும் அனுபவம் பெறுவதிலும், திட்டக் குழுவை ஒழுங்குபடுத்துவதிலும் அரசாங்கம் பரிதாபகரமாகத் தவறிவிட்டது!

"காங்கிரசுக் கட்சி எதைத் தொட்டாலும் அதெல்லாம் அவமானத்திலும் கெட்ட பெயரிலும்தான் முடித்துள்ளது.

"ஒரு திட்டம் திறமையானதாக இருக்கவேண்டுமானால், முடிவாக அத்திட்டத்தை நிறைவேற்றும் மாநிலங்களுக்கு திட்டத்தை உருவாக்கும்போதும் — அதனோடு தொடர்பு இருக்கவேண்டும்.

"தற்போது திட்டங்கள் சில வரையப்பட்டு நிறைவேற்றுவதற்காக மாநிலங்களிடம் தரப்பட்டு வருகின்றன; வைதிக இந்தியப் பெற்றோர்கள், தம் பையன் இன்ன பெண்ணைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதுபோல் இருக்கிறது.

'திட்டக் குழு, சரிவர அமைக்கப்பட வேண்டும்; நாடாளுமன்றத்திடமிருந்தும், அரசிடமிருந்தும்தான் அது, அதிகாரம் பெறவேண்டும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன், திட்டக் குழு சம்பந்தமாக நிர்வாகச் சீர்திருத்தக் குழு தெரிவித்துள்ள சிபாரிசுகளை அமுல் நடத்தவேண்டுமெனக் கோரி கொண்டுவரப்பட்ட தனி நபர் தீர்மானத்தின்மீது பேசுகையில் வலியுறுத்தினர்.

பொறுப்பின்றி அதிகாரம் செலுத்தும் குழு அது!

தீர்மானத்தைக் கொண்டுவந்த சுதந்தரக் கட்சி உறுப்பினர் சேவியர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திட்டக் குழுவைத் திருத்தியமைக்க இயலவில்லையென்றால், அந்தக் குழுவைக் கலைத்துவிட வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

"திட்டக் குழுபற்றிய நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவது, தேசீயப் பொருளாதாரத்துக்குத் தீங்கு ஏற்படாமல் தடுப்பதாகவாவது இருக்கும்.

"அமைச்சரவைக்கும் மேலானதோர் அமைச்சரவை போன்று திட்டக் குழு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

"பொறுப்பின்றி அதிகாரம் செலுத்தும் அமைச்சரவை போல் அது இயங்குகிறது."

குறைக்க இயலாதாம்

விவாதத்தில் குறுக்கிட்டுத் தலைமையமைச்சர் இந்திரா பேசுகையில் கூறியதாவது:—

"திட்டக் குழுவின் முக்கியத்துவத்தைக் குறைப்பதோ, அல்லது அதன் அலுவல்களைப் பறிப்பதோ இயலாது. அவ்வாறு செய்தால், அது பேராபத்தையே ஏற்படுத்தும்."

பாரூர் உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் சிலைத் திறப்பு

தர்மபுரி மாவட்டம் பாரூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில், 23—4—68 பிற்பகல் 2-30 மணிக்கு திருவள்ளுவர் உருவச் சிலையை, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்; திரு. பி. வீ. ஆண்டியப்ப மணியக்காரர் விழாவுக்குத் தலைமைவகிப்பார்.

ந. தருமலிங்கம்

சுற்றுப்பயணம்

ஏப். 21: மன்னார்குடி; 22: கீழப்பாண்டி, கீரக்களூர்; 23: திருச்சிராப்பள்ளி; 24: உம்பளச்சேரி, ஆள்காட்டித்திடல்; 25: நல்லூர், துரைத்தோப்பு, ஜாம்புவானோடை, 26: கொறுக்கை; 27: திருத்துறைப்பூண்டி; 28: அகரக்கடம்பனூர்; 29: உரத்தநாடு.

பாட்டாளிகள் ஓரணியில் திரண்டிடும் நாள்!

தமிழகத்தில் மே விழா--அனைத்துக் கட்சிக் குழு வேண்டுகோள்

சென்னை, ஏப். 19—

1968 மே முதல் நாளன்று மே நாள் நாள் விழாவினைச் சிறப்புறக் கொண்டாடுவதற்காக அனைத்துக் கட்சிகள்—தொழிற் சங்க அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் 19—4—68 மாலை 6-மணியளவில், சட்டமன்றப் பழைய விடுதியில் உள்ள தி. மு. க. சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டததிற்கு கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., தலைமை தாங்கினர்.

வருகை தந்த பிரதிநிதிகள், மே நாள் விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுவதற்கான கருத்துக்களை வழங்கினர்கள்.

இறுதியாகக் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பெற்று அனைத்துக் கட்சிகளுக்கும், தொழிற் சங்க அமைப்புகளுக்கும் வேண்டுகோளாக விடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானங்கள்

தீர்மானங்கள் வருமாறு:—

1. உலகப் பாட்டாளி மக்கள் திருநாளாள மே நாள் விழாவை மே முதல் நாளன்று தமிழகத்தின் தலைநகரிலும், மற்றும் பெரு நகரங்கள் — பேரூர் — சிற்றூர்களிலும், கீழே கையொப்பமிட்டுள்ள கட்சிகளும், தொழிற் சங்க அமைப்புக்களும், இந்த அனைத்துக் கட்சிக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க பங்கு பெறும் கட்சிகளும், தொழிற் சங்க அமைப்புகளும் ஒவ்வொரு ஊரிலும் ஒரே அணியாய்த் திரண்டு மே நாள் விழாவினை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய் அமைந்திட நடத்துதல் என்று ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

2. மே நாள் விழா, அனைத்துக் கட்சிக் குழுவில் சேர்ந்துள்ள அரசியல் கட்சிகளின் தலைமை அமைப்புகளும் தொழிற் சங்க அமைப்புக்களும், நாடெங்கும் உள்ள தங்கள் தங்கள் கிளைகளுக்கு ஆங்காங்கு இது போன்ற குழுக்களை அமைத்து, ஒவ்வொரு ஊரிலும் மே நாள் விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு அறிக்கை மூலம் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. இந்த அனைத்துக் கட்சி மே நாள் விழாக் குழு, மீண்டும் 23—4—69 காலை 10 மணிக்குக் கூடி மற்ற திட்டங்களை நிறைவேற்றுவதென்று தீர்மானிக்கிறது.

இங்ஙனம்

என். வி. நடராசன்
எம்.எல்.சி. (தி.மு.க.)

எம். கல்யாணசுந்தரம்
(வலது கம்யூனிஸ்டு)

வி. பி. சிந்தன்
(இடது கம்யூனிஸ்டு)

எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி
(தமிழரசுக் கழகம்)

கே. எம். சுந்தரம்
(ஏ.ஐ.டி.யு.சி. தமிழ்நாடு)

காட்டூர் கோபால்
(தொ. மு. சங்கம்)

தேசியக் கொடிக்கும் எதிர்ப்பா?

தமிழகக் காங்கிரசாரின் விநோதக் கூத்து!

அமைச்சர் மு. கருணாநிதி இடித்துரை

செங்கற்பட்டு, ஏப். 19—

"தமிழக அமைச்சர்களாகிய எங்களுக்குக் காங்கிரசார் எதற்காகக் கறுப்புக்கொடி காட்டுகிருர்கள்? எதற்காக எதிர்ப்பு—வெறுப்பு? விவசாயக் கிடங்கைத் திறக்கிறோமே—அதற்கு எதிர்ப்பா? பள்ளிக்கூடங்களைத் திறக்கிறோமே — அதற்கு எதிர்ப்பா? தண்ணீர் வழங்குகிறோமே—அதற்கு எதிர்ப்பா? தாய்–சேய் நல விடுதிகள் திறக்கிறோமே அதற்கு எதிர்ப்பா? எதற்காக எதிர்ப்பு?

"'கறுப்புக் கொடி காட்டாதீர்' எனக் கெஞ்சுவதாக எண்ணாதீர்! எதிர்ப்பைக் கண்டு அஞ்சுபவர்களல்லர் நாங்கள்—எதிர்ப்பிலேயே வளர்ந்தவர்கள்—எதிர்ப்பிலேயே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்!

"கட்சிக் கூட்டங்களுக்கு வரும்போது எங்களுக்குக் கறுப்புக் கொடி பிடிப்பதில் ஆட்சேபனை இல்லை; ஆனால், பொதுப் பணிகள் செய்ய வரும்போது—பொது நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்ள வரும்போது, அவர்களின் கார்களில் தேசியக் கொடி பறக்கிறது; ஆகவே, காங்கிரசார் காட்டும் கறுப்புக்கொடி, எங்களுக்கு மட்டுமல்ல—எங்கள் கார்களில் பறந்து கொண்டிருக்கும் தேசியக் கொடிக்கும் சேர்த்துத்தான் காட்டுகிருர்கள்! அதுதான் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது! தேசியச் சின்னமான தேசியக் கொடிக்கு அவமானம் ஏற்படுத்தக் காங்கிரசார் முயலுவதா?

"பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ள நாங்கள் வரும்போது கறுப்புக்கொடியைக் காட்டினல் அது உசிதம்; ஆனல், நீர்த் தேக்கத் தொட்டியைத் திறக்க—பொதுப் பணியாற்ற வரும்போது, 'திரும்பிப் போ' என்ருல், 'நீர்த் தேக்கத் தொட்டியைத் திறக்க வராதே; விவசாயக் கிடங்கைத் திறகக வராதே, பள்ளிக்கூடத்தைத் திறக்க வராதே; தாய்--சேய் நல விடுதியைத் திறக்க வராதே' என்பதுதான் பொருளாகும்."

இவ்வாறு, பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 20 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள விவசாயக் கிடங்கைத் திறந்து வைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினர்.

மேலவைத் தேர்தல்

ஆசிரியப் பெருமக்களுக்கு வேண்டுகோள்

"22—4—68 அன்று நடைபெறவிருக்கும் வடாற்காடு–தென்னாற்காடு மாவட்ட ஆசிரியர் தொகுதிக்கான மேலவை இடைத்தேர்தலில், ஆசிரியப் பெருமக்களின் நலன் நாடுபவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பிற்குரியவரும் தி. மு. கழக வேட்பாளருமாகிய திருவண்ணாமலை திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கு தங்களின் மேலான முதல் வாக்கினை அளித்து, வெற்றி பெறச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்"

என்று, மங்களூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அ. கிருட்டினன் கேட்டுக்கொள்கிருர்.

குழுக் கூட்டங்கள்

சென்னை 76-வது வட்டம்

சென்னை 76-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டமும் செயற்குழுக் கூட்டமும், 21-4-68 பிற்பகல் 2 மணிக்கு திருவல்லிக்கேணி தேவராய முதலி தெரு, 7-ம் எண் இல்லத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு துணைச் செயலாளர் க. சந்திரசேகரன் அறிவிக்கிருர்.

தொழிலாளர் கல்வி வகுப்புத் தொடக்க விழா

சென்னை வடக்குக் கடற்கரை சாலையில் உள்ள கப்பற்கூடத் தொழிற் கூடத்தில் 22—4—68 மாலை 4-30 மணிக்கு தொழிலாளர் கல்வி நிறுவன வட்டார இயக்குநர் திரு. வேதமுத்து எம்.ஏ, அவர்கள் தொழிலாளர் கல்வி வகுப்பைத் தொடங்கி வைப்பார்; கல்வி அதிகாரி திரு. ஜி. சுந்தரராசன் எம்.ஏ., சு. பாலன், என். செல்வராஜ் ஆகியோர் பேசுவர்; தொழிலாளர் நல அதிகாரி திரு. டி. ஆறுமுகம் பி.ஏ. வரவேற்பார்; திரு என். சண்முகம் பி.ஏ. தலைமை வகிப்பார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

22--4--68

சங்கொலிக்குப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு சுப்பிரமணியர் கோயில் திடலில்; தலைவர்: அ. இலட்சுமணகவுண்டர்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., தமிழரசி பி.ஏ., கே. கோவிந்தராசன், மற்றும் பலர்.

கீழப்பாவூர்

தி. மு. க. சார்பில் இரவு 8 மணிக்கு பாண்டியனார் திடலில்; தலைவர்: கே. அரங்கநாதன்; பேசுவோர்: ஆலடி அருணா எம்.எல்.ஏ., எம். எம். பீர் முகம்மது எம்.எல்.ஏ., அ. இராமநாதன். (தேவராசன் – நிர்மலா குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மதுரை 31-வது வட்டாரம்

தி. மு. க சார்பில் மாலை 7 மணிக்கு இலட்சுமி திரை அரங்கு பின்புறத்தில் (பழைய குயவர்பாளையம் சாலையில்); தலைவர்: கா. பெ. சரவணன்; பேசுவோர்: குறள்பித்தன், கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., கே. எஸ். சந்தானம் எம்.சி., எஸ். காமராசு எம்.சி., எம். எம். முத்தரசு, மற்றும் பலர்.

கீரக்களூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு சத்திரத்தடியில்; தலைவர்: இரா. கோவிந்தராசன்; பேசுவோர்: ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., இரா. சங்கரன், மன்னர் மன்னன், கோ. விராசாமி. (மணிவண்ணன்–பத்மினி குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

குடந்தை

5-வது வட்ட தி. மு. க. சார்பில் பாராட்டு விழா; மாலை 6-மணிக்கு பழைய பாலக்கரை காவிரி ஆற்றில்; பாராட்டு பெறுபவர்: கோ. சி. மணி எம்.எல்.சி.; தலைவர்: ஏ. ஆர். இராமசாமி; பாராட்டு வழங்குவோர்: மன்னை ப. நாராயணசாமி, எஸ். கணேசன் எம்.எல்.ஏ., என். கிட்டப்பா எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., கே. சாமிநாத அய்யர், டி. மாரிமுத்து, டி. வி. எஸ். மணி, ஆர். கன்னையன் எம்.சி., சு. பத்மநாபன், பி. வி. செயராமன் எம்.சி., எஸ். கோதண்டராமன் பி.காம். பி.எல்., எஸ். ஆர். இராதா எம்.சி., எம். பழனிசாமி எம்.சி.

பெ. சத்திரப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர்: எம். முத்துசாமி; பேசுவோர்: நடிகர் சௌந்தரராசன் பி.காம், எஸ். நெடுமாறன், பூவாளூர் தியாகராசன், வயலூர் கணேசன், கரு. அன்புதாசன், மற்றும் பலர்.

பாலர் அரங்கம்
ஏப். 21-ந் தேதி பிற்பகல் 2 மணி; மாலை 4-15 மணிக்கு
"காஸ்டவேஸ்"
(வால்டிஸ்னியின் நிடுக்கிடும் காட்சிகள் நிறைந்த கலர் படம்)
கட்டணம் வழக்கம்போல்

ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.